# நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களில் ஒருவராக விளங்கியவர்!

## மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச. 27-**

**ஞானபீடம் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்ற மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களுள் ஒருவராக விளங்கியவர், எம்.டி.வாசுதேவன் அவர்கள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஞானபீடம், பத்மபூஷன், சாகித்ய அகாடெமி உள்ளிட்ட உயர் விருதுகளை வென்ற மலையாள எழுத்தாளர் திரு. எம்.டி. வாசுதேவன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்துகிறேன்.

நாலுகெட்டு, அசுரவித்து, மஞ்சு, காலம் போன்ற நாவல்கள், நிர்ம்மால்யம், பெருந்தச்சன், ஒரு வடக்கன் வீரகாத போன்ற திரைப்படங்கள் வழியே கேரள மாநிலத்தின் சமூக மாற்றங்களை மிக நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டிய படைப்பாளராக அவர் திகழ்ந்தார்.

தமிழ், ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட அவரது நூல்களின் வழியே, மலையாளிகளைக் கடந்த பெரும் வாசகப் பரப்பைச் சொந்தமாக்கிக் கொண்டவர் அவர். மலையாளத்திரையுலகின் கிளாசிக்குகள் எனக் கருதப்படும் பல படங்களுக்கு வாசுதேவன் அவர்கள் திரைக்கதை எழுதியதோடு, தாமே சில படங்களை இயக்கவும் செய்திருக்கிறார், தேசிய விருது முதலிய விருது களையும் பெற்றிருக்கிறார்.

எழுத்தாளர், திரைக்கதையாசிரியர், இயக்குநராக மட்டுமன்றி மாத்ருபூமி இதழின் ஆசிரியராக இருந்து, பல இளம் எழுத்தாளர்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுத்த வகையில் மலையாள மொழிக்கும் கேரளச் சமூகத்துக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகள் பல தலைமுறைகளுக்கு அவரது பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும்.

நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களுள் ஒருவராக விளங்கிய எம்.டி. வாசுதேவன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உலகம் முழுவதும் உள்ள அவரது வாசகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.


# மூணாறில் 2 டிகிரிக்கு சென்ற தட்பவெப்பநிலை!

கேரளா,டிச.27–

மைனஸ் 2 டிகிரி செல்சியஸ் அளவுக்கு தட்பவெப்பநிலை நிலவுவதால் கேரள மாநிலம் மூணாறு உறைபனியால் மூடப்பட்டுள்ளது. குளிர்ந்த சூழலுடன் மூணாறின் அழகு காண அங்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் ஊட்டி, கொடைக்கானலுக்கு அடுத்து சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்த மலை பகுதி கேரளாவில் உள்ள மூணாறு. அழகிய நிலப்பரப்பும், அதற்கேற்றாற் போல் சில்லென்று மிதமான சூழலும் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்த பகுதியாக மூணாறு உள்ளது.

இந்த நிலையில், கடத்த 2 ஆண்டுகளாக மூணாறில் பனிப்பொழிவு குறைந்து காணப்பட்ட நிலையில், நடப்பாண்டு தட்பவெப்ப நிலை மைனஸ் 2 டிகிரியை தொட்டுள்ளது. பல்வேறு இடங்களில் புல்வெளிகளில் பனி துகள்கள் படிந்துள்ளதுடன், ஏறி உள்ளிட்ட நீர்நிலைகளில் பனியின் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது. கன்னி மலை, பேபி குளம், அருவி காடு உள்ளிட்ட இடங்களில் குளிர் நிலவுகிறது. இந்த இதமான சூழலை சுற்றுலா பயணிகள் அனுபவித்து வருகின்றனர். மூணாறில் நிலவும் இதமான சூழலையும், அதன் அழகையும் ரசிக்க சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் அங்கு கடை வைத்திருக்கும் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# கைத்தடி!





தூங்கிய தமிழரை தட்டி எழுப்பி
திராவிட ராக்கிய தந்தையின் கைத்தடி
அடிமை விலங்குகளை எல்லாம்
உடைத் தெறிந்த பெரியாரின் கைத்தடி
தலை குனிந் துழன்ற எளியோரை
தன்மானத் தோடு நிமிர்த்திய கைத்தடி
நாற் சந்தில் நின்ற நலிந்தோர்க்கு
நற் பாதை காட்டிய வழிகாட்டி
அறியாமை இருள் அடியோடு போக்கிய
அறிவாசானின் அடையாளமான கைத்தடி
ஏணியாய் நின்று ஏதிலியார் எல்லாரையும்
ஏற்றிக் காத்த பெரியாரின் கைத்தடி
எங்கள் ஆட்சி எம் தந்தை
தங்களுக்கே என்று சொன்ன அண்ணா
தலைவர் நெஞ்கில் தைத்த முள்ளை
கலைஞர் அகற்றினார் அவர் வழியில்
வைக்கத்து வெற்றி நூற்றாண்டு விழா
வைக்கத்தில் பெரியார் நினைவகமும் நூலகமும்
வையத்தாருக்கு வழங்கிய நம் முதல்வருக்கு
வைக்கம் வீரரின் கைத்தடி பரிசானது
போதும் இது போதும் இதனினும்
பெரிய பரிசேதும் இனி உண்டோ
பேசவும் இயலாது பெருமிதத்தால் பூரித்துப்
பொங்கிய மகிழ்வோடு நின்ற மாட்சி
திராவிட மாடல் எதுவென்று ஏகடிப்பேசித்
திரிந்தோர்க்கு இதுதான் அந்த ஒப்பிலா
திராவிடம் என ஓங்கி முழங்கிய நாள்
இவர்தாம் பெரியார் என்றுணர்த்திய நாள்
இது நினைவு நாளல்ல இது எழுச்சிநாள்
புதுப் புனல் பாய்ச்சிய புரட்சி நாள்

நன்னன் குடி
**அவ்வை தமிழ்ச்செல்வன்**

# திருவெண்ணெய்நல்லூரில் ரூ.49 இலட்சத்தில் அல்லாசாமி குளம்!

## அமைச்சர் - முனைவர் க.பொன்முடி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்!

விழுப்புரம், டிச.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி திருவெண்ணை நல்லூர் பேரூரில் அல்லாசாமி குளத்தை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர். சு.விஸ்வநாதன், பேரூர் செய லாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல், துணைத் தலைவர் ஜோதி, வார்டு கவுன்சிலர் சலிமா தாஜுதீன் , செயல் அலுவலர் முரளி, முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கு.சரவண குமார், மாவட்ட பிரதிநிதி சுரேஷ் பாபு , இலக்கிய அணி விஜயபாபு, தகவல் தொழில் நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ண ராஜ், முன்னாள் மாணவர் அணி அன்பழகன் , இளைஞர் அணி நிர்மல் ராஜ், சுரேஷ், சதாம் உள்ளிட்ட நகர நிர்வாகிகள் சையத் நாசர், டி.கே. எஸ்.செந்தில்முருகன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கு.பாபு, சக்திவேல், அறிவழகன், ஜோதி, பரமேஸ்வரி செல்வம், கமலா கலியபெருமாள், அரங்க ராஜ், ரகு, டி.பாக்யராஜ், வார்டு செயலாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

## வடலூரில் ஆதிதிராவிடர் நலக்குழு

# மாவட்ட - மாநகர நிர்வாகிகள் ஆலோசனை - ஆய்வுக் கூட்டம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கடலூர், டிச. 27-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கடலூர் கிழக்கு, மேற்கு திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது என ஆதிதிராவிடர்நல குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கடலூர் கிழக்கு, மேற்கு திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் வருகிற 29.12. 2024 ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.00 மணி அளவில் வடலூர், சென்னை கும்பகோணம் சாலையில் உள்ள மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், எனது (ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.) தலைமையில் வேளாண்மைத் துறை அமைச்சரும் கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எ.வ.வேலு, தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளருமான சி.வெ. கணேசன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ், எம்.பி., ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைத் தலைவருமான மா.மதிவேந்தன் மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி.இராஜன், முன்னாள் எம்.எல்.ஏ., திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர்கள் பா.துரைசாமி, மு. பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தன், அரூர் சா. இராசேந்திரன் , மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன்னிலையில் -

திருவண்ணாமலை வடக்கு மாவட்டச் செயலாளர் தரணிவேந்தன், எம்பி., விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன், எம்.எல்.ஏ., கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தகார்த்திகேயன் எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி., தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை, எம்.எல்.ஏ., மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ., நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., மற்றும் கழக முன்னணியினர் சிறப்புரையாற்றிட, ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வரவேற்புரையாற்றிட நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு கடலூர் கிழக்கு, மேற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இக்கூட்டத்திற்கு வரும்போது தங்கள் அமைப்பின் நடவடிக்கை குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டு வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பட்டியல் இன மக்களுக்கு அரணாக இருக்கும்

# ‘திராவிட மாடல்’ அரசுக்கு எதிராக பொய்ப் பிரச்சாரம் செய்வதா?

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி. பிரிவு மாநிலத் தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் கண்டனம்!



சென்னை, டிச.27 -

“பட்டியல் இன மக்களுக்கு அரணாக இருக்கும் திராவிட மாடல் அரசுக்கு எதிராகப் பொய் பிரச்சாரம் செய்வதா? என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி. பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு என்றுமே அரணாக நிற்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே. மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது பட்டியலின மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திருப்பது தமிழ் நாட்டில் மட்டுமே என்ற தரவுகள் பெருமை தரக்கூடியதாகும்.

உயர் நீதிமன்ற நீதிபதி என்றாலே உயர் சாதியினர் மட்டும் தான் என்றிருந்த நிலையை மாற்றியது கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு தான்.

1974 ஆம் ஆண்டு பட்டியலினத்தைச் சேர்ந்த அ. வரதராஜனை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக பரிந்து ரைத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் தான். பின்னர் அவர் உச்ச நீதிமன்ற நீதிபதி பதவி வரை எட்டினார். இதற்கு ஒரே காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான். உச்சகட்டமாக, அனைவரும் அர்ச்சகராலாம் என்ற சட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார். அதனைச் செயலுக்கு கொண்டு வந்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

கோயிலுக்குள்ளேயே நுழைய முடியாமல் இருந்த பட்டியலின மக்கள், இன்றைக்குக் கோயில் கருவறைக்குள் சென்று பூசை செய்வதற்கு திராவிட மாடல் அரசே காரணம்.

ஆதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்க ளைத் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்த ஆணையத்தின் மூலம் இதுவரை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு, 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் மின் இணைப்புப் பெற 90 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாடுகளற்ற மயானங்களைப் பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகையாக அரசு சார்பில் ரூ.10 லட்சம் வழங்கப்படுகிறது. அரசின் நடவடிக்கை காரணமாக, ஆதிதிராவிடர் பள்ளி மாணவர் களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்து வருகிறது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒடுக்கப்பட்ட மக்களை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் வகையில் கடனுதவியை தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

அருந்ததியின மக்களுக்கு உள் ஒதுக்கீடு வரை, சமூக நீதியை நிலைநாட்டுவதில் என்றைக்குமே திராவிட முற்போக்குக் கழகம் பின்வாங்கியதில்லை என்பது தான் வரலாறு.

3 பட்டிலியனத்தைச் சேர்ந்தவர்கள் என, அதிக பட்சமாக அமைச்சர்களாக நியமிக்க ப்பட்டது, காமராஜர் ஆட்சிக்குப் பிறகு இப்போது தான். அதில் ஒருவருக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் பொறுப்பு வழங்கியது சமீப காலங்களில் நிகழாத ஒன்று.

எல்லாவற்றுக்கும் மேல், பட்டியலினத்தைச் சேர்ந்த முருகானந்தம் தமிழ்நாட்டின் தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டு, அவரும் சமூக நீதியை கட்டிக்காக்க சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

சமீபத்தில், பட்டியலினத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆம்ஸ்ட்ராங்கை சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக நியமித்த திராவிட மாடல் அரசின் நடவடிக்கை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சமூக நீதிப் பார்வையை வெளிப்படுத்துகிறது

இவ்வாறு உயரிய பொறுப்புகளுக்கு பட்டியலினத்தவர்களை நியமித்து அதிகாரத்தை வழங்கி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ஆனால், இவற்றையெல்லாம் வேண்டுமென்றே தவிர்த்துவிட்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, பொத்தாம் பொதுவாக திமுக அரசு மீது குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இது தவறு என்பதற்கான சான்றுகளே மேலே உள்ளவை.

பட்டியலின மக்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் கொடுமைகள் நிகழ்த்தப்ப டுவது போன்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன.

நிலைமை இப்படியிருக்க, அனைவருக்குமான அரசாக செயல்படும் திராவிட மாடல் அரசுக்கு எதிராக பாஜகவின் குரலை சிலர் இங்கு பிரதிபலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பழுக்கற்ற அரசுக்கு எதிராக அவதூறுகள் தொடர்ந்தால், தமிழ்நாட்டில் பாஜகவுக்கு ஏற்பட்ட நிலைமை தான் இவர்களுக்கும் ஏற்படும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி தென்கரை பேரூராட்சி பகுதியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., புதிய ரேஷன் கடையை திறந்து வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருச்சுழி சட்டமன்றத் தொகுதி, காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், டி.வேப்பங்குளம் கிராமத்தில் ரூ.28 இலட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைமாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் காரியாபட்டி ஒன்றிய பெருந்தலைவர் முத்துமாரி, மாவட்ட கவுன்சிலர் தமிழ்வாணன், காரியாபட்டி ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், செல்லம், செந்தில், அரசு அலுவலர்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.